# தீபகற்ப மலேசியாவின் நான்காவது மேய்புபணி மாநாடு
# (அக்டோபர் 2-5 2016)

## தீபகற்ப மலேசியாவின் பேரயர் மற்றும் ஆயர்களின் மேய்புபணி அறிக்கை

இறைவனின் மக்களே,
“தந்தையாம் கடவுளிடமிருந்தும், நம் ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் அருளும் அமைதியும் உரித்தாகுக” (1திமொ1:2)

சென்ற வருடத்தில் இந்த திருவருகை காலத்தின் முதல் நாளில் இறைவன் நமக்கு அளித்த எல்லா அருட்கொடைகளுக்கும், ஆசீர்வாதங்களுக்கும் அதே நேரத்தில் இந்த புதிய திருவழிப்பாட்டு ஆண்டை ஆரம்பிக்க நம்பிக்கையை ஊட்டியதற்காகவும் நாம் அவருக்கு நன்றிகூறி புகழ்கிறோம். நமது பேர் மறைமாவட்ட, மறைமாவட்ட பேரவைக்கு மே 2016, பின் இப்போது தீபகற்ப மலேசியாவின் நான்காவது, 2-5 அக்டொபர், மஜோடி, பிலேன்தோங்கில் நடைபெற்று முடிந்தது. அது ஒரு ஆவியானவரின் அனுபவம், புதிய பெந்தகோஸ்து” பேராயர்கள், ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொது நிலையினர், சரவாக் மாநிலத்திலிருந்து வந்தவர்கள் என்று அறுநூற்று பதிநெட்டு பங்கேற்பாளர்கள் ஒன்றுகூடிய ஒரு இறை அனுபவம்.

2ஆம் வத்திக்கான் சங்கத்திற்கு பிறகு நடைபெற்ற அஜிர்னாமெந்தோ (1976) பி.எம்.பி.சி 1(1986) பி.எம்.பி.சி 2(1996) பி.எம்.பி.சி 3(2006) தற்போது நடைபெற்ற மாநாட்டு வழியாக இறைமக்களுக்கு மறுமலர்ச்சிக்கு அழைப்புவிடுத்ததற்காக இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம். நம்முடைய தீபகற்ப மலேசிய திருச்சபை கடந்த நாற்பது ஆண்டுகலாக ஒரு முழுமையான வளர்ச்சிகளையும் பல புதிய சவால்களை சந்தித்து என்று யாரும் மறுக்கமடியாது.

ஆவியானவர்க்கு செவிகொடுத்ததின் வழியாகவும், ஒருவர் மற்றவருக்கு செவிசாய்ப்பதின் வழியாகவும் நாம் புதிய உற்சாகத்துடனும், திறந்த மனதுடனும் பல புதிய சவால்களை எதிர்நோக்க முடிந்தது. அதே நேரத்தில் நம்மை நாம் ஆராய்ந்துப் பார்த்தும், ஒரு திருச்சபையாக நின்று ஒரு மாற்றத்தை ஏற்படுத்த நேர்மையும் துணிவும் பெற்றிருக்கின்றோம். ஆகவே நாம் வருகின்ற சகாப்தத்தை புதுபிக்கப்பட்ட மனதுடனும், சிந்தனையுடனும் நோக்கி, நம்முடைய சொகுசான உறைவிடங்களை விட்டு விட்டு, இக்காலத்தின் அறிகுறிகளை அறிந்து, மாற்றங்களுக்கும் உருமாற்றங்களுக்கும் குரல் கொடுக்க முன் செல்வோம். மலேசியர்களாக இருக்கும் நாம், நம்முடைய நாட்டில் நிலவும் மாற்றங்கள், சவால்களை நம்முடைய வாழ்வில் விசுவாசத்தையும் இணைத்து ஆற்றலுடன் எதிர்கொள்ள வேண்டும். ஏனெனில் அவை எல்லாம் ஒரே சூழல்தான். இதில் உலகத்தை சார்தது இறைவனை சார்ந்தது ஒன்றும் இல்லை. நாம் ஒரு உண்மையான- தனிப்பட்ட ஆன்மீகம், அரசியல், பொருளாதாரம், சுற்றுச்சூழல் நிறைந்த ஒரு தேசத்தையும், எல்லா மலேசியர்களும் ஒன்றித்து வேளைசெய்யவும், ஒரு முழுமை பெற்ற நாட்டை உருவாக்கிட நாம் நம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

இவர்கள் காண் பல மாற்றங்களை மேற்கொண்டிருக்கும் மலேசிய திருச்சபைக்கு ஒரு புதுபிக்கப் பெற்ற தூரநோக்கமும், இறைப்பணியும் தேவைப்படுகிறது. நாம் திருச்சபையின் நான்கு சுவர்களுக்குள் திருப்தியடைய முடியாது. நம்முடைய பாப்பரசர் பிரான்சிஸ் தமது “மகிழ்ச்சியின் நற்செய்தியில் கூறியுள்ளார்.” ஒரு மறைப்பரப்புப்பணி என்பது ஒருவிதத்தில் இயேசுவுக்காக பாடுபடுவதும் அவருடைய மக்களுக்காக பாடுபடுவதும் ஆகும்.

அதே நேரத்தில் நற்செய்தி அறிவிப்புப் பணியின் மகிழ்ச்சி திருடப்பட நம்மையே நாம் அனுமதிக்காதிருப்போம். (ஏன்80,83) ஆகவே நம்முடைய இறைப்பணியாகப்பட்டது செவிமடுப்பதும், தெரிந்து தெளியவும், இறைவாக்கினர் திருச்சபையாக, புதிய யுக்திகளை மேற்கொள்ளும் திருச்சபையாக எல்லாரையும் அனைக்கக்கூடிய திருச்சபையாக, உறவு பாலம் அமைக்கும் நம்முடைய தூரநோக்கிலும், இறைப்பணியிலும் அமைதல் வேண்டும். நாம் மேற்கொள்ளும் உறையாடல் தெரிந்து தெளிவது செயல்கள் என்னும் என்னும் செயல்முறை நம்மை ஒரு முழுமையான மறைபரப்புச் செயல்கள் வடிவத்திற்கு இட்டுச்

செல்ல வேண்டும். அதாவது 1) வாழ்வில் சாட்சியம் புரிவது 2) மனித சமூதாயத்திற்கு சேவை 3) பிற மதத்தினருடன் உரையாடல் 4) வெளிப்படையாக நற்செயடதியை அறிவிப்பது 5) செபம், திருவழிப்பாடு, அருட்சாதனங்கள்.

கடந்த நாற்பது வருடங்களாக நாம் அடிப்படை கிறிஸ்துவ சமூகங்களை கட்டி எழுப்புவதில் கவனம் செலுத்தி, ஒற்றுமை, பயிற்சிகள், மனித மேம்பாடு, பிற மதத்தினருடன் உரையாடல், இளைஞர்கள், குடும்பம், வாழ்வு, சமூக தொலைதொடர்பு போன்றவைகளில் முக்கியதுவம் கொடுத்து வந்தோம். இப்பொழுது நாம் இன்னும் முழுமையான, ஆழமான பகுதிகளுக்குச் சென்று குருசபைக்கும் அப்பால், இறை அரசுக்காக அர்த்தமுள்ளவர்களாகவும் பயனுள்ளவர்களாகவும் முன்செல்ல வேண்டும்.

ஆகவே நாம் இறைமக்களாக இருக்கும் உங்களை (குருக்கள், துறவிகள், பொதுநிலையினர்) நம்பிக்கையின் சீடர்களாக இருக்க அழைக்கின்றோம். ஏனெனில் இதன் வழியாக சமூதாயத்தில் நம்முடைய பங்குகள் உண்மையாகவே "இயேசுவின் முகமாக" இருப்பதாக. திருச்சபை பல சவால்கள், பயம், வறட்சியின் மத்தியிலும் ஒரு கலங்கரை விளக்காக, கிறிஸ்துவர்களுக்கு மட்டுமல்ல எல்லோருக்கும் வாழ்வு தர வேண்டும்.

நாங்கள் உங்களை கேட்டுக்கொள்வது, எல்லா பணிக்குழுக்களும் கடவுள் மனிதர் மீதுள்ள நம்பிக்கையை புதுபிக்கவும் புதிய யுக்திகளை கையாண்டு, எல்லாரையும் உள்ளடக்கிய, அதனுடன் உறவு பாலம் அமைக்கும் மனப்பான்மையுடன் மறைப்பணியில் செயலாற்ற அழைக்கின்றோம்.

இந்த திருவருகையின் முதல் மெழுகுவர்த்தியை ஏற்றும் இன்நாளில் தீபகற்ப மலேசிய திருச்சபையில் நாம் உண்மையான பணி செய்ய நாம் திரும்பவும் அர்ப்பணம் செய்வோம். தீபகற்ப மலேசியாவின் மேய்ப்பர்களாக இருக்கும் நாங்கள் "பி எம் பி சி" முன் வைக்கப்பட்ட பரிந்துரைகளை எங்களுடைய பெரிய மேற்றாசானத்தி, மேற்றாசானத்திலும் ஆதரித்து செயலாற்ற ஆவன செய்வோம். ஏனெனில் அது ஒரு "புதிய பெந்தகோஸ்து" ஆகும். புனித பவல் திமொத்தேயுவுக்கு எழுதிய கடிதத்தில் கூறுகிறார், "உன்மீது என் கைகளை வைத்துத் திருப்பணியில் அமர்த்தியபோது உனக்குள் எழுந்த கடவுளின் அருள்கொடையினைத் தூண்டி எழுப்புமாறு நினைவுறுத்துகிறேன்." (2திமோ 1:6) ஞானஸ்தானம், உறுதிபூசுதல், குருத்துவம், நோயில் பூசுதல் எனும் அருட்சாதனங்கள் வழியாக கைகளை வைத்ததின் வழியாக நாம் அனைவரும் இறைப்பணி செய்ய அதிகாரம் பெற்றுள்ளோம். ஆகவே நீங்கள் புனித பவுலின் அழைப்பை ஏற்று நாம் அனைவரும் இந்த பி எம் பி சி-யின் வழிகாட்டுதலை அடுத்த சகாப்ததில் (2016-2025) மகிழ்ச்சியுடனும் ஆர்வத்துடனும் செயல்படுத்த உங்களை அழைக்கின்றோம். நம்பிக்கையின் சீடர்களாக இருங்கள் மறைப்பணியின் அன்னையாகிய மரியாள் நமக்காக மன்றாடுவார்களாக.

மேதகு மறைதிரு ஜூலியன் லியோ
கோலாலம்பூர் பேராயா

மேதகு மறைதிரு செபஸ்தியன் பிரான்சிஸ்
பினாங்கு ஆயர்

மேதகு மறைதிரு பெர்னட் போல்
மலாக்கா ஜொகூர் ஆயர்

*திருவருகை காலத்தின் முதல் ஞாயிறு அன்று கொடுக்கப்படும், 27 நவம்பர் 2016*